**Catholic Bishop's House**

1331-W, John Paul Nagar
K.T.C. Nagar,
Maharaja Nagar (Post)
Tirunelveli - 627 011
Tamil Nadu
INDIA
(Courier Address)

Post Box No. 108
Palayamkottai - 627 002
Tamil Nadu
INDIA
(Postal Address)

**Rt Rev. S. Antonysamy D.D., D.C.L.,**
**Bishop of Palayamkottai**

அன்பார்ந்த அருட்தந்தையர்களே, அருட்சகோதர, சகோதரிகளே, அன்பு இறைமக்களே!

உயிர்த்த இயேசுவின் மகிழ்ச்சியும், அமைதியும் உங்களோடு என்றும் இருப்பதாக!

கொரோனா தொற்று மீண்டும் மக்களுடைய மத்தியிலே பரவ ஆரம்பித்திருக்கின்ற வேளையிலே, நாம் நம்மையே காத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். மக்களின் நலனை கருத்தில்கொண்டு, மாநில அரசானது கடந்த ஏப்ரல் 10 ஆம் தேதி முதல் சில கட்டுப்பாடுகளை மீண்டும் அமல்படுத்தியிருக்கிறது. குறிப்பாக 31-08-2020 அன்று அரசால் கொடுக்கப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று அறிவித்துள்ளது. இந்த நெறிமுறைக் கட்டுப்பாடுகள் சமூக வாழ்வு மட்டுமன்றி ஆன்மீக வழிபாட்டு முறையையும் உள்ளடக்கியுள்ளது. எனவே நமது ஆலய வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் நாம் கவனமாக இருக்க அழைக்கப்படுகிறோம்.

தமிழக அரசால் 31-08-2020 அன்று கொடுக்கப்பட்ட வழிகாட்டு முறைகளின் பின்னனியில், நமது மறைமாவட்டத்தில் வழிபாடுகள், பிற ஆன்மீகக் கொண்டாட்டங்கள் மற்றும் ஆலயம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டுமென்று, நான் 01-09-2020 அன்று ஒரு சுற்றறிக்கை அனுப்பினேன். அதை மீண்டும் வாசித்து, பின்பற்ற அழைக்கின்றேன். அத்தோடு சில நெறிமுறைகளை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விளைகிறேன்.

1. ஞாயிற்றுக்கிழமைகளில், ஒரு திருப்பலியில் பங்கு பெறுகின்ற மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, வசதிக்கேற்ப இரண்டு, அல்லது மூன்று திருப்பலிகள் நிறைவேற்றப்படலாம்.

2. ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ள திருவருட்சாதனக் கொண்டாட்டங்கள் (திருமுழுக்கு, புனித முதல்நன்மை, உறுதிபூசுதல், திருமணம்) நிறைவேற்றப்படும்பொழுது, பங்கேற்கும் நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கை 100க்கு மேல் செல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. அடக்கத்திருப்பலி கோவிலில் நிறைவேற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். நம்பிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப, கல்லறைகளிலே திருப்பலி நிறைவேற்றி, அடக்கச்சடங்கை நிறைவேற்றலாம். இதில் 50 பேர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

4. ஆலயங்கள் இரவு 8 மணிக்குள் அடைக்கப்பட வேண்டும். 8 மணிக்கு மேல், கோவில் வளாகத்தில் இறைமக்கள் இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

5. வழக்கமான பாதுகாப்பு நெறிமுறைகள் - முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளி கடைப்பிடிப்பது, கைகளைக் கழுவுவது, - ஆலயத்தில், ஆலய வளாகத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

குணமளிக்கும் இயேசு, நமக்கும், அனைவருக்கும் நல்ல சுகத்தைத்தர, தொற்றுநோயை சமூகத்திலிருந்து விரட்ட ஜெபிக்கின்றேன்.

ஆசீர்!

ஆண்டவரில் அர்ப்பணத்துடன்

+ ச. அந்தோனிசாமி
பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர்

**Palayamkottai** : Tel : **+91 462 2522042**, Mobile : **9443370160**
E-mail : bishop@palayamkottaidiocese.org; Website : www.palayamkottaidiocese.org